# பனித்துளி செய்திகள்!



**"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)**

**துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!**

(திங்கள்தோறும்)

**08.02.2021**

## 2. 'உயிர்ப்பிக்கும் விசுவாசமே' நமது தேவை!

ஜெபித்தும், நீண்ட காலமாய் பதில் கிடைக்க தாமதமோ? இந்த தாமதம் நம் விசுவாசம் தோதிக்கப்படுவதற்குரிய பரீட்சையாகும்! நமக்கு கிடைத்திடும் **'பதிலைவிட' நமக்குள் இருக்கும் விசுவாசமே அதிக மதிப்புள்ளது!** வாக்குத்தத்த பூமிக்கு அழைக்கப்பட்ட ஆபிரகாம், பல வருடங்களாகியும் அதை அடையாமல் போனாலும்.... விசுவாசத்தோடே மரித்தான்! என சவாலிடும் வசனம் நம் நெஞ்சில் தங்குவதாக! (எபி.11:13). "அவர் என்னை கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்" என முழங்கிய *யோபுவின்* விசுவாசம், நம்மிலும் பற்றி எரிவதாக! (யோபு.13:15).

இந்த ஒப்பற்ற விசுவாசமே, *யவீருவின்* குமாரத்தி மரித்துப்போனாலும், *லாசரு* அடக்கம் செய்து நான்கு நாள் ஆகிப்போனாலும், அவர்களை உயிர்பெறச் செய்தது!

**- ரத்னம்**